| MCOP. No.207 / 2024 | Name : – ஞானப்பிரகாசம் | PW– 1 | Date:20.05.2025. |
| --- | --- | --- | --- |

**சாட்சி மனுவின் பேரில் இன்று மீண்டும் வரவழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி: –**

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். மனு விபரங்கள் குறித்து கூடுதல் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கின்றேன். நான் இன்று தாக்கல் செய்யும் என்னுடைய கூடுதல் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நன்கு தெரிந்து கையொப்பம் செய்துள்ளேன். அதை என் சாட்சியமாக ஏற்கவேண்டுகின்றேன். எனது தரப்பில் தாக்கல் செய்யப்படும் கீழ் கண்ட ஆவணங்களை மனுதாரர் தரப்பு கூடுதல் சான்றாவணங்களாக குறியீடு செய்து கொள்ள வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

**எனது சார்பாக:–**

8). பெரம்பலூர் பிரியம் மருத்துவமனையில் நான் சிகிச்சை பெற்றதற்கான மருத்துவ பில்கள் ரூ.27,700/–க்கானது உண்மை நகல் **ம.சா.ஆ.8, (2–ம் எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் ஆட்சேபனையின் பேரில் குறியீடு செய்யப்படுகின்றது).**

9). 12.04.2024–ம் தேதியிட்டு பெரம்பலூர் பிக்சல் ஸ்கேன்சில் இருந்து என் பெயருக்கு வழங்கப்பட்ட ரசீது ரூ.2,500/–க்கானது அசல் **ம.சா.ஆ.9,(2–ம் எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் ஆட்சேபனையின் பேரில் குறியீடு செய்யப்படுகின்றது).**

10).12.04.2024–ம் தேதியிட்டு பெரம்பலூர் பிக்சல் ஸ்கேன்சில் இருந்து என் பெயருக்கு வழங்கப்பட்ட ரசீது ரூ.4000/–க்கானது அசல் **ம.சா.ஆ.10, (2–ம் எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் ஆட்சேபனையின் பேரில் குறியீடு செய்யப்படுகின்றது).**

**11).** 12.04.2024–ம் தேதியிட்டு பெரம்பலூர் பிக்சல் ஸ்கேன்சில் இருந்து என் பெயருக்கு வழங்கப்பட்ட ரசீது ரூ.2000/–க்கானது அசல் **ம.சா.ஆ.11, (2–ம் எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் ஆட்சேபனையின் பேரில் குறியீடு செய்யப்படுகின்றது).**

என் பெயருக்கு வழங்கப்பட்ட ஊனச்சான்று அசல் **நீ.ம.சா.ஆ.1** ஆகும். மனுப்படி உத்தரவாக பிரார்த்திக்கின்றேன்.

**குறுக்கு விசாரணை :– ( 2–ம் எதிர்மனுதாரர் தரப்பில்)**

ம.சா.ஆ.8 ஆவணம் வழக்கிற்காக என்னால் தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. ம.சா.ஆ.8 ஆவணத்தில் வழங்கியவரின் கையொப்பம் இல்லாததால் இது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. ம.சா.ஆ.9 முதல் ம.சா.ஆ.11 வரையிலான ஆவணங்கள் வழக்கிற்கு பின்னிட்டு அதிக இழப்பீடு பெறவேண்டி தயாரிக்கப்பட்டவை என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு அதிகம் என்றாலும், மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை :– இல்லை.**

**ஒப்பம்/– சி. சங்கர்,**
**தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**